## தலைப்பு 252 – தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில்

உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இவ்வறிக்கையின் பின்வரும் பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி ரூபா 2,776,001,859 ஆக இருந்த போதிலும், நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2019 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ஆரம்ப மீதி ரூபா 3,130,760,785 ஆக திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி நிலைமை தொடர்பான கூற்றில் முன்னைய ஆண்டிற்கான தரவுகள் திருத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டிற்கான தரவுகளை திருத்தம் செய்ய வேண்டி ஏற்படுகையில் அதற்கிணங்க நிதி நிலைமை தொடர்பான கூற்றின் முன்னைய ஆண்டிற்கான தரவுகளை திருத்தி சமர்ப்பித்தல் வேண்டும். | நிலையான சொத்துக்கள் சிகாஸ் சொத்துக்கள் பதிவேட்டிற்கான ஆரம்ப மீதியினைப் பதிதலானது தொடர்ந்தும் இடம்பெற்று வருவதனால் இது தொடர்புபட்ட நிதி நிலைமை மீதான கூற்றில் முன்னைய ஆண்டிற்கான தரவுகளைத் திருத்துவதற்கு முடியாது போனதனால் அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. |

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்றுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| செலவுப் பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மனைப் பொருட்களும் அலுவலக உபகரணங்களும் மற்றும் இயந்திரங்களினதும் பெறுமதி ரூபா 10,210,481 ஆக இருந்த போதிலும், நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கொள்வனவாக ரூபா 5,499,783 மாத்திரம் காட்டப்பட்டதன் காரணமாக ரூபா 4,710,698 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | கொள்வனவுகளை உரிய காலப்பகுதியிலேயே கணக்கு வைத்தல் வேண்டும். | 25 மாவட்டங்களுக்குரிய சொத்துக்களை பொருள் இருப்பு பதிவேட்டில் பதிவதற்கு முடியாமை மற்றும் முன்னைய ஆண்டில் பொருள் இருப்பு பதிவேட்டில் பதியப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட பணம் ஆரம்ப மீதிக்கு செம்மையாக்கப்பட்டது. |

### 1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான தேசிய அரச சபையின் 1975 இன் 1 ஆம் இலக்க சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் அதிகாரச்சட்டம் | திணைக்களத்தின் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றினைச் சமர்ப்பிக்க வேண்டிய 615 உத்தியோகத்தர்களில் 300 உத்தியோகத்தர்கள் அதாவது 49 சதவீதமானவர்கள் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றினைச் சமர்ப்பித்திருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்நிலைமை எதிர்காலத்தில் இடம்பெறுவதனை அமுல்படுத்து வதற்காக பிரிவுத் தலைவர்களினூடாக மேற்பார்வை நடவடிக்கை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008(1) ஆம் இலக்க சுற்றறிக்கை யினால் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 | பிரசை / சேவை நாடுனர் சட்ட பிரகடனத்தை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல் நடவடிக்கையை மேற்பார்வை செய்தல் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிரசை / சேவை நாடுனரின் சட்டப் பிரகடனத்தை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல் நடவடிக்கையினை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தி | மற்றும் மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடைமுறை திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு செயல் முன்னேற்றத்தை அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | ரூபா 4,574,178 பெறுமதியான புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பதிவேடுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் செம்மையாய்வினை மேற்கொண்டு அது தொடர்பாக அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த மெய்மை யாய்வினை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மேற்கொள்ளுதல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான புத்தகங்கள் தொடர்பான மெய்மையாய்வு 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டது எனவும் அதில் 1174 புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பான புலனாய்வுடன் விபரமான புத்தக மீளாய்வு 2019 செப்தெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 04 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 16.59 மில்லியன் நிதி ஏற்பாட்டிற்கு மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக அந்த நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 8.54 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 35.97 சதவீதத்திலிருந்து 76.42 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாடு செயற்திறனாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். | சுற்றறிக்கை எல்லைக்கு இணங்கியிருத்தல், கட்டிட திணைக்களத்தினால் மதிப்பீட்டினை வழங்குதல் தாமதமடைதல், கட்டுநிதி கிடைக்காமை, நிதி ஏற்பாட்டினை வழங்குதல் ஆண்டின் இறுதியின் போது இடம்பெறுதல் ஆகிய விடயங்கள் காரணமாகும். |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| சேவையை விட்டுச் சென்ற 12 உத்தியோகத்தர்கள் தொடர்பாக ரூபா 574,167 தொகை, மரணமடைந்த 04 உத்தியோகத்தர்கள் தொடர்பாக ரூபா 344,065 தொகை, இடமாற்றம் கிடைத்த 02 உத்தியோகத்தர்கள் தொடர்பாக ரூபா 274,880 தொகை, ஓய்வுபெற்றுச் சென்ற 02 உத்தியோகத்தர்கள் தொடர்பாக ரூபா 232,230 தொகையுமாக அறவிட வேண்டியகடன் மீதிகள் காணப்பட்டன. அக்கடன் மீதிகளுக்குள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட முடியாதிருந்த 10 கடன் மீதிகள் தொடர்பாக ரூபா 317,693 காணப்பட்டது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கான மேலும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இக்கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 2.3 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்து வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் ஏதாவது நிர்ணயிக்கப்பட்ட செயற்பாட்டிற்காக முற்பணங்களை வழங்கும் போது பதவிநிலை உத்தியோகத்தருக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 12 சந்தர்ப்பங்களின் போது ரூபா 101,812 மொத்த தொகையான முற்பணங்கள் பதவி நிலையற்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைய அறிவுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2000 இலிருந்து பதவி நிலை உத்தியோகத்தர் களுக்கு மாத்திரம் முற்பணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கக்கூடிய உச்ச அளவான முற்பணத் தொகை ரூபா 100,000 ஆக இருந்தும் அதற்கு முரணாக 04 சந்தர்ப்பங்களின் போது மாவட்ட செயலாளர்களுக்கு ரூபா 504,000 மொத்த தொகையான முற்பணங்கள் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2021 குடித்தொகை மற்றும் வீட்டு மதிப்பீடு தொடர்பாக பயிற்சி வகுப்புக்களை நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் செய்யப்பட வேண்டியிருந்ததனால் இந்த முற்பணத் தொகை மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது எனவும் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதேவேளை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும். |
| (இ) | மாவட்ட செயலகம் அமைந்துள்ள திணைக்களத்தின் மாகாண அலுவலகத்திற்கு திணைக்களத்திற்குரிய நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக முற்பணங்களை வழங்கும் போது மாவட்ட செயலாளருக்கு உரிய பணம் வழங்கப்பட்டிருந்தும் ரூபா 746,750 திணைக்களத்திற்குப் புறம்பான தரப்பினர்ககளுக்கு வழங்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல் வேண்டும். | வெளிநாட்டு மானியமாகக் கிடைக்கின்ற கட்டுநிதிகள் நிதி ஏற்பாடாக வழங்க முடியாததனால் உரிய மாவட்டங்களிலுள்ள மாவட்ட செயலாளர்களுக்கு முற்பணமாக வழங்கப்பட்டது எனவும் தற்பொழுது அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தூரநோக்கும் செயற்பணியும்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| பொருத்தமானதும் சரியானதுமான தரவுகளை வழங்வதன் மூலம் மிகவும் விளைதிறனாக நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல் திணைக்களத்தின் செயற்பணியாக இருந்த போதிலும், திணைக்களத்தின் தரவுகளை வழங்கும் திகதி காட்சிப்படுத்தலின் பிரகாரம் தரவுகளை | நிர்ணயிக்கப்பட்ட திகதியில் தரவுகளை பயன்படுத்துவோர் தரவுப் பயன்பாட்டிலிருந்து தரவுகளின் பொருத்தமான தன்மை தரம் மற்றும் பிரயோசனத் | தொழில்நுட்ப நவீனமயப்படுத்தல், சில பிரிவுகளின் கடமைகளை பல்வகைப்படுத்தல், திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்றப்பட்ட காரணம், அடிக்கடி அமைச்சின் நோக்கெல்லை மாற்றமடைதல், |

| | | |
|---|---|---|
| வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிகளை விட 01 மாதத்திலிருந்து 16 மாதங்கள் வரையான காலவீச்சினை எடுத்து தரவுகள் வழங்கப்பட்ட 32 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | தன்மையை அதிகரித்துக் கொள்ளலாம் என்பதனால் அதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதவியணியினர் வெற்றிடங்கள் முதலியன இதற்கு தாக்கமளித்திருந்தது. |

## 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,354 மில்லியனான 10 செயற்பாடுகள் ஆண்டிற்குள் இடம்பெற்றிருக்கவில்லைல. | திட்டமிடப்பட்டவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தரவுகளைச் சேகரிப்பதற்கு முடியாமை, நிதி ஏற்பாடு கிடைக்காமை, மாவட்டங்களில் கணனி வசதிகள் இல்லாமை, தேவையான ட டெவலெட் கணனினளை பெற்றுக் கொள்வதற்கு முடியாமை மற்றும் ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை செயலாற்றல் அறிக்கையில் உட்படுத்துவதற்கு தவறுகள் இடம்பெற்றிருந்தமை முதலிய விடயங்கள் இந்நிலைமைக்கு தாக்கமளித்துள்ளது. |

## 3.3 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 28 செயற்பாடுகள் சம்பந்தமாக எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தைப் பெற்றுக் கொள்ளல் 25 சதவீதத்திலிருந்து 88 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்வதன் மூலம் திணைக்களத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். | மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதியின்மை, டெப்லட் கணனியை பெற்றுக் கொள்வதில் தாமதம், நாட்டில் காணப்படுகின்ற வளவாளர்களை ஈடுபடுத்துவதிலுள்ள சிக்கல், பல்வேறு மீளாய்வுத் திட்டங்கள் |

| | | |
|---|---|---|
| | | ஈடுபடுத்தப்படுவதன் காரணமாக பதவியணியினரின் கடமைகள் அதிகரித்தல் முதலியன காரணமாக இருந்தன. |

### 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் சில நடவடிக்கைகளுக்குரிய வெளியீடுகள் மற்றும் அறிக்கைகளின் தரவுகளை வழங்குதல் கலண்டரின் பிரகாரம் வெளியிடப்பட்டிருந்தமையும் உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தும் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு தவறியிருந்தமையும் ஆகிய விடயங்களின் காரணமாக திணைக்களத்தினால் செயலாற்றல் அறிக்கையின் தகவல்களைச் சமர்ப்பித்தலானது பொறுப்பற்ற வகையிலும் கவனயீனமாகவும் இடம்பெற்றிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | அறிக்கையினைத் தயாரிக்கும் போது அதன் விளைதிறன் அதிகரிக்கப்பட வேண்டு மாவிருந்தால் அவை முழுமையான மற்றும் சரியான தகவல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். | தவறுதலாக இடம்பெற்றுள்ளது. |

### 3.5 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் மூன்று ஆண்டுகளுக்கான பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கிய பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதனை ஆறு மாதங்களுக்கு குறையாத காலத்திற்குள் | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |

| | | |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், திணைக்களத்தினால் ஒரு பிரதான திட்டம் தயாரிக்கப்படாததுடன் மீளாய்வாண்டிற்கான விபரமான பெறுகைத் திட்டம் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | | |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ரூபா 11,900,000 பெறுமதியான செயற்படும் நிலையில் இல்லாத 04 வாகனங்கள் காணப்பட்டதுடன் அதில் ஒரு வாகனம் 2014 ஆம் ஆண்டிலிருந்தும் 02 வாகனங்கள் 2017 ஆம் ஆண்டிலிருந்தும் மற்றைய வாகனம் 2018 ஆம் ஆண்டிலிருந்தும் ஓடுவதிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | ஓடுவதற்கு பொருத்தமற்ற வாகனங்களை கைதவிர்ப்புச் செய்தல் வேண்டும். | கைதவிர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**3.7 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 880(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 880(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் இரண்டு மாதங்களுக்குள் அந்நடவடிக்கை முடிவுறுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. |

## 3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2014 சனவரி மாதத்தின் போது விபத்துக்குள்ளாகியிருந்த ஒரு கெப் வாகனத்தை திருத்தம் செய்தல் பொருளாதார ரீதியாக, விளைதிறனாக இல்லாததனால் ஓடுவதிலிருந்து அகற்றுமாறு உள்நாட்டு முகவர் நிறுவனம் தெரிவித்திருந்தது. அவ்வாறு இருக்கையில் மற்றுமொரு நிறுவனத்திடம் ரூபா 1,514,625 செலவு செய்து 2015 ஆம் ஆண்டின் போது இவ்வாகனம் திருத்தம் செய்யப்பட்டிருந்தும் மோட்டார் வாகன பரிசோதகரால் அதன் இயந்திர நிலைமை தொடர்பாக திருப்தியடைந்திருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. 2016 செப்தெம்பர் மாதத்தின் போது மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடமிருந்தும் இந்த வாகனத்தின் ஓடுகின்ற நிலைமை விசாரிக்கப்பட்டிருந்ததுடன் ஓடுவதற்குப் பொருத்தமற்றது என தெரிவிக்கப்பட்டிருந்தது. வாகனம் விபத்துக்குள்ளாகி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அறிக்கைத் திகதி வரை இவ்வாகனத்தின் நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வாகனம் விபத்துக்குள்ளாகி 5 ஆண்டுகள் கடந்திருந்ததனால் நட்டத்தை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நி.பி 104(4) இன் கீழ் நட்டம் தொடர்பான இறுதி விசாரணையை மேற்கொள்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தும் அடிக்கடி இடம்பெறுகின்ற அமைச்சு மாற்றத்தினால் இதுவரை அக்குழு கூடியிருக்கவில்லை எனவும் அக்குழு தொடர்பு கொண்டு மேற்கொண்டு இறுதி விசாரணை அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. |
| (ஆ) | 2019 மார்ச் மாதத்திலிருந்து 2019 ஏப்ரல் மாதம் வரை ஒரு முன்னோடிச் செயற்திட்டத்திற்காக வாடகை வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,258,736 தொகை ஒரு தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இக்கால எல்லைக்குள் | பொருளாதார சிக்கனம் ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்களத்தின் வாகனங்களை உச்ச அளவு பயன்பாட்டுடன் பயன்படுத்தி மேலதிக தேவைப்பாடுகளுக்காக மாத்திரம் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

திணைக்களத்திற்குச் சொந்தமான வாகன குளாமிலுள்ள 08 வேன்கள் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டும் 03 டபிள் கெப் வாகனங்கள் சாரதிகள் இல்லாமலும் காணப்பட்டன.

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள குறிகாட்டிகளின் பிரகாரம் நாளதுவரையாக்குதல் இடம்பெறுதல் 78 சதவீதத்தினாலும் புதிய குறிகாட்டிகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் உள்ளடக்குதல் 60 சதவீதத்தினாலும் 70 சதவீதத்தினாலும் ஆக மீளாய்வாண்டில் உரிய பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்து கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆண்டு முழுவதும் பேணப்படுகின்ற மீளாய்வுகளின் தகவல்களை அடிப்படையாக கொண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற புதிய குறிகாட்டிகளின் முழுமையான மீளாய்வு நடவடிக்கைகளை முடிவுறுத்தி இறுதி அறிக்கை வெளியிடப்படும் வரை திணைக்களத்தின் இணையத்தளத்தில் உள்ளடக்குதல் செய்ய முடியாதிருந்தது. |

## 5. மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் இறுதிவரை அங்கீகரித்திருந்த பதவியணியினர்களில் 32 சதவீதம் அதாவது 602 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவி வெற்றிடங்கள் காணப்படுதல் நிறுவனத்தின் செயலாற்றலுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துமாக யிருந்தால் அப்பதவிகளை நிரப்புவதற்கும் அவ்வாறான தாக்கம் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | | இல்லாதிருந்ததால் அங்கீகரித்த பதவியணியினரைத் திருத்தம் செய்வதற்கும் கவனம் செலுத்துதல் வேண்டும். | |
| (ஆ) | திணைக்களத்தின் 05 உத்தியோகத்தர்கள் கல்வி நடவடிக்கைகளுக்காகவும் தொழிலில் நிலைத்திருப்பதற்காகவும் வெளிநாடு சென்றிருந்தும் அவர்கள் உரிய காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் சேவைக்கு சமூகமளித்திருக்கவில்லை. இதன் காரணமாக அவர்களிடமிருந்து 03 ஆண்டுகளிலிருந்து 13 ஆண்டுகள் வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 1,338,464 அறவிட முடியாதிருந்தது. மேலும், மேலே குறிப்பிட்ட ஒரு உத்தியோகத்தரினால் 18 மாதத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கல்வி விடுமுறைக்கான உடன்படிக்கைக்கு கடப்பாடு செய்யப்பட்டிருக்காததுடன் அதற்காக அறவிட வேண்டிய தண்டப்பணமும் கணிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | வருடாந்த இடமாற்றத்திற்கு உட்பட வேண்டிய 220 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளிலிருந்து 35 ஆண்டுகள் வரையான காலம் இடமாற்றம் கிடைக்காது நீண்டகாலம் ஒரே இடத்தில் கடமையாற்றுவதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர் | சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையிலானதாக இருந்தும் 35 ஆண்டுகளான நீண்டகாலம் ஒரு சேவை நிலையத்தில் இருத்தல் நியாயமற்ற நிலைமையாக இருப்பதனால் இடமாற்ற நடைமுறையின் பிரகாரம் | சேவைத் தேவைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இடமாற்றம் செய்யப்படுவதாகவும் உத்தியோகத்தர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட E-HRM தகவல் முறைமையை நாளதுவரையாக்கி திறந்த விண்ணப்பம் கோரி இடமாற்றக் குழுவினூடாக இடமாற்றம் பெற்றுக் கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | | | |
| (I) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 02 இன் பிரகாரம் தயாரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு தகவல்களை உள்ளடக்கி தயாரித்தல் வேண்டும். | மனித வளங்கள் திட்டத்தினைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை உருவாக்கப்பட்டு வருகின்றது. |
| (II) | சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், 292 உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்கப்பட வேண்டிய பயிற்சி மணித்தியால ங்களின் எண்ணிக்கை பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். | அடுத்து வரும் ஆண்டுகளில் அனைத்து உத்தியோகத்தர் களுக்காகவும் 12 மணித்தியால பயிற்சி வழங்குதல் அத்தியாவசியமான தேவைப்பாடாகக் கருதி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |